செ.வெ.எண் : 02/செப்டம்பர் நாள் : 01.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## கால்நடைப்பராமரிப்புத் துறையின் சார்பாக, கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியம், கொளத்தூர் ஊராட்சியில் இன்று (01.09.2017) கால்நடைப்பராமரிப்புத் துறையின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமினைத் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் மூலம் பால் உற்பத்தி பெருகுவதோடு சம்பந்தப்பட்ட நபர்களின் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கான வாய்ப்பாக அமைகின்றது. அதேவேளையில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களை தடுப்பதற்கான தடுப்பூசி போடும் சிறப்பு முகாம்களும் நடத்தப்படுகின்றன.

அந்த வகையில் இன்றைய தினம் நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியில் நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இச்சிறப்பு முகாமானது மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் (இன்று) 01.09.2017 முதல் துவங்கி 21.09.2017 வரை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இச்சிறப்பு முகாம்களுக்காக கால்நடை மருத்துவர்கள் தலைமையில் மொத்தம் 13 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழுவிலும் ஒரு கால்நடை மருத்துவர் தலைமையில் கால்நடை ஆய்வாளர் மற்றும் கால்நடை பராமரிப்பாளர் தடுப்பூசிப் போடும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்தடுப்பூசி முகாம்களுக்காக மாவட்டத்தில் மொத்தம் 86,000 டோஸ் அளவில் கால்நடை தடுப்பூசி மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. எனவே, மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் தங்களது பகுதியில் நடைபெறும் இந்த சிறப்பு கால்நடை கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, இராமநாதபுரம் முகவை ஊரணியில், ஊரணி கரையினை பலப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.தி.மோகன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை, உதவி இயக்குநர்கள் (பரமக்குடி) மரு.பன்னீர் செல்வம், (இராமநாதபுரம்) மரு.செங்குட்டுவன், கால்நடை மருத்துவர் மரு.முருகராஜன் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**